بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *11/10/2024* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**அகழ் போர் மற்றும் பனூ குரைஸா போர் ஆகியவற்றை முன்னோக்காகக் கொண்டு நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை நெறிமுறை குறித்த விளக்கம்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

அஹ்ஸாப் (போர்) பற்றிய குறிப்பு சென்று கொண்டிருந்தது. மறுப்பாளர்கள் புயல் காற்று, சூழல் காற்று ஆகியவற்றின் காரணமாக போர்க்களத்தை வெற்றிடமாக்கி விட்டனர் என்பதைப் பற்றிய குறிப்பு சென்று கொண்டிருந்தது. அல்லாஹ் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடமிருந்து (எதிரிப்) படைகளைத் திருப்பி வெருண்டோட வைத்தபோது, நபி (ஸல்) அவர்கள், اَلْآنَ نَغْزُوْكُمْ وَلَا يَغْزُوْنَنَا (அல்ஆன நக்ஸூக்கும் வலா யக்ஸூனனா) என்று கூறினார்கள். அதாவது இனிமேல் நாம் குரைஷியர்களுக்கு எதிராகக் கிளம்புவோம்; அவர்கள் நமக்கு எதிராகக் கிளம்புவதற்கு அவர்களுக்கு தைரியம் இருக்காது. இதற்குப் பிறகு உண்மையில் அவ்வாறே நடந்தது. அகழை முற்றுகையிட்டிருந்தது பதினைந்து நாள்கள் அல்லது ஒரு கூற்றின்படி, இருபது இரவு, பகல் அல்லது ஒரு மாதத்திற்கு அருகில் இருந்தது. அகழ் போரில் ஒன்பது பேர் ஷஹீதாகி இருந்தனர். மேலும் அபூ சுஃப்யானின் படையைப் பற்றி தகவல் அறியச் சென்றிருந்த இரண்டு சஹாபிகள் முன்னரே ஷஹீதாகி விட்டனர். இணைவைப்பவர்களில் மூன்று நபர்கள் கொல்லப்பட்டிருந்த நிலையில், இவ்வாறு மொத்தம் பதினொன்று சஹாபிகள் ஷஹீதாகி இருந்தனர்.

அஹ்ஸாப் போருக்கு அற்புதமான முடிவு ஏற்பட்டது. இது குறித்து ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதியிருக்கிறார்கள்: ஏறத்தாழ இருபது நாள்கள் முற்றுகைக்குப் பிறகு மறுப்பாளர்களின் படை தோல்வியடைந்தவாறு, மதீனாவிலிருந்து திரும்பிச் சென்று விட்டது. மேலும் அவர்களுக்கு உதவி செய்வதற்காக வெளி வந்திருந்த بَنُوْ قُرَيْظَه (பனூ குரைஸா எனும் யூத) கோத்திரத்தினரும் தமது கோட்டைக்குள் திரும்பி வந்து விட்டனர். இந்தப் போரில் اَوْس (அவ்ஸ்) கோத்திரத்தின் பெரிய தலைவர் ஆகிய سَعْدْ بِنْ مُعَاذْ (சஅது பின் முஆஸ்) ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு எப்படிப்பட்ட ஆழமான காயம் ஏற்பட்டது என்றால், அவர்கள் இறுதியில் அதனாலேயே உயிர் பிழைக்க முடியவில்லை. இந்தப் போரில் குரைஷியர்களுக்கு எப்படிப்பட்ட ஒரு நஷ்டம் ஏற்பட்டதென்றால், அதற்குப் பின்னர் அவர்களுக்கு முஸ்லிம்களுக்கு எதிராக பிறகு இவ்வாறு படையைத் திரட்டி வெளிவருவதற்கான அல்லது மதீனாவைத் தாக்குவதற்கான தைரியம் வரவில்லை. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பு சொல்லுக்குச் சொல் நிறைவேறியது.

மறுப்பாளர்களின் படை சென்று விட்ட பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் சஹாபிகளைத் திரும்பிச் செல்வதற்கு கட்டளையிட்டார்கள். மேலும் முஸ்லிம்கள் போர்க்களத்திலிருந்து எழுந்து மதீனாவிற்குள் நுழைந்து விட்டனர். இவ்வாறு எதிர்பாராத விதமாகவும், திடீரெனவும் முடிவுக்கு வந்த அஹ்ஸாப் போர் அல்லது அகழ் போர் என்பது மிகவும் அபாயமான போராக இருந்தது. இதை விடப் பெரிய எந்தவொரு கலகம் நிறைந்த துன்பம் அந்த நேரம் வரை முஸ்லிம்களுக்கு வந்ததுமில்லை; அதற்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்வில் இப்படிப்பட்ட எந்தவொரு பெரிய துன்பம் வரவுமில்லை. இது இஸ்லாத்தின் கட்டடத்தை அடித்தளத்துடன் அசைத்து விட்ட பயங்கரமான பூகம்பமாகும். 'இப்போது (நாம்) அவ்வளவுதான்' என்று பலவீனமான மக்கள் புரிந்து கொண்டனர். இந்தத் துன்பத்தின் கசப்பை بَنُوْ قُرَيْظَه (பனூ குரைஸா எனும் யூத) கோத்திரத்தின் நம்பிக்கை துரோகம் இரு மடங்காக்கி விட்டது.

இந்த எல்லாக் குழப்பங்களுக்கும் அடிநாதமாக இருந்தவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பேருதவி செய்து, மதீனாவிலிருந்து அமைதியுடனும் பாதுகாப்புடனும் வெளியேற அனுமதி அளித்த بَنُوْ نَضِيْر (பனூ நஸீர் எனும் யூத) கோத்திரத்தைச் சேர்ந்த பேருதவியை மறந்த யூதர்கள் ஆவர். இது அதே யூதர்களுடைய தலைவர்களின் வெறியூட்டும் செயலாக இருந்தது. அதனால் அரேபிய பாலைவனத்தின் அனைத்துப் பெயர் பெற்ற கோத்திரங்களும் இஸ்லாத்தின் பகைமை எனும் போதையால் போதையூட்டப்பட்டவர்களாக மாறி, முஸ்லிம்களை அழித்தொழிப்பதிற்காக மதீனாவில் ஒன்று கூடியிருந்தனர். அந்த நேரத்தில் அந்தக் காட்டு விலங்குகளுக்கு நகரத்தில் நுழைவதற்கு சந்தர்ப்பம் கிடைத்திருந்தால் ஒரு முஸ்லிம் கூட உயிருடன் தப்பித்திருக்க முடியாது; எந்தவொரு தூய முஸ்லிம் பெண்ணின் கண்ணியமும் அந்த மக்களின் அசுத்தமான தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பாக இருந்திருக்க முடியாது என்பது உறுதியான, திட்டவட்டமான விஷயமாகும். ஆனால் அதிகமான எண்ணிக்கையைக் கொண்ட படை தோல்வியடைந்தவாறு திரும்பிச் செல்ல நேரிட்டதும், முஸ்லிம்களின் படை நன்றியுடனும், நன்றியறிதலைக் காட்டியவாறும் அமைதியுடனும், மன நிம்மதியுடனும் தமது வீடுகளுக்குத் திரும்பி வந்து விட்டதும் அல்லாஹ்வின் அருளும், அவனுடைய வல்லமையின் மறைவான கைகளுமே ஆகும்.

ஆனால் بَنُوْ قُرَيْظَه (பனூ குரைஸா எனும் யூத) கோத்திரத்தினர் குறித்த அபாயம் நிலைபெற்றிருந்தது. மேலும் அவர்களின் குழப்பங்களைத் தடுப்பது அவசியமாக இருந்தது. ஏனெனில் அவர்கள் இருப்பது மதீனாவில் முஸ்லிம்களுக்கு நண்பனாக இருந்து பகைவனாக செயல்படுவதை விட ஒருபோதும் குறைவாக இருக்கவில்லை. அதைத் தடுப்பதற்காக, بَنُوْ قُرَيْظَه (பனூ குரைஸா எனும் யூத) கோத்திரத்தினருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதை بَنُوْ قُرَيْظَه(பனூ குரைஸா) போர் என்று கூறுகின்றனர். அது ஹிஜ்ரி 5-ஆம் ஆண்டு ஸுல்கஃதா மாதம், அதாவது, கி.பி. 627-ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடந்தது. அகழ் போரிலிருந்து திரும்பி வந்த பிறகு ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும், சஹாபிகளும் ஆயுதங்களைக் கழற்றி விட்டனர். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுவதாவது, நாங்கள் வீட்டில் இருந்தோம். நபி (ஸல்) அவர்களுக்கு ஒரு மனிதர் குரல் எழுப்பியவாறு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களே! நீங்கள் ஆயுதங்களைக் கழற்றி விட்டீர்களா? அல்லாஹ்வின் மீது

ஆணையாக! நாங்கள் ஆயுதங்களைக் கழற்றவில்லை. மேலும் இப்போதுதான் நாங்கள் அஹ்ஸாப் போரைப் பின்தொடர்ந்தவாறு, திரும்பி வந்து கொண்டிருக்கிறோம். எதுவரையெனில், நாங்கள் (மதீனாவிற்கு தெற்கு திசையில் சுமார் 20 கி.மீ தொலைவில் இருக்கும்) حَمْرَاءُ الْأَسَدُ (ஹம்ராவுல் அஸது) வரை சென்றடைந்து விட்டோம். மேலும் அல்லாஹ் அவர்களுக்குத் தோல்வியைக் கொடுத்து விட்டான் என்று கூறினார். மேலும் நபி (ஸல்) அவர்களை بَنُوْ قُرَيْظَه (பனூ குரைஸா எனும் யூத) கோத்திரத்தினரின் பக்கம் முகம் திரும்பிச் செல்லுமாறு அவர் சைகை காட்டினார். இவர் திஹ்ய கல்பீ ரழியல்லாஹு அன்ஹு அவர்களா என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கேட்டபோது, ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவரை ஒத்தவரான இவர்கள் ஜிப்ரீல் (அலை) அவர்கள் ஆவார்கள் எனக் கூறினார்கள். அந்த நேரத்திலேயே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், بَنُوْ قُرَيْظَه (பனூ குரைஸா எனும் யூத) கோத்திரத்தை நோக்கி செல்லுமாறும், அஸ்ர் தொழுகையை அங்கேயே தொழுமாறும் அறிவிப்பு செய்ய வைத்தார்கள். அதன்படி, அறிவிப்பைக் கேட்டதுமே சஹாபிகள் மிக விரைவாக வெளியேறினர். சில சஹாபிகள் அஸ்ர் தொழுகைக்கான நேரம் முடிந்து விடும் என்ற அச்சத்தால் வழியிலேயே தொழுது விட்டனர். மேலும் சில சஹாபிகள்بَنُوْقُرَيْظَه (பனூ குரைஸா எனும் யூதர்களின் கோத்திரம் அமைந்திருந்த கோட்டைக்கு அருகில்) சென்று அஸ்ர் தொழுகையைத் தொழுதனர். அப்போது சூரியன் மறைந்து விட்டிருந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இரண்டு கூட்டத்தினரையும் எதுவும் கூறவில்லை. அவர்கள் அலீ (ரலி) அவர்களை அழைத்து, படையின், عِقَابْ (இகாப்) என்ற பெயரைக் கொண்ட கருப்பு நிறக் கொடியைக் கொடுத்தார்கள். முதன் முதலில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை ஒரு குழுவுடன் முன்னணிப் படையாக முன்னால் புறப்பட வைத்தார்கள். மேலும் தாமும் அவர்களுக்குப் பின்னால் புறப்பட்டு விட்டார்கள்.

بَنُوْ قُرَيْظَه (பனூ குரைஸா எனும் யூதர்களின்) கோத்திரத்தை முஸ்லிம்கள் முற்றுகையிட்டது பற்றி இன்னும் அதிகமாக இவ்வாறு குறிப்பு உள்ளது: முற்றுகை நீண்டு விட்டபோது, யூதர்களுக்கு உடன்படிக்கைக்கான எந்த நிலைமையும் கிடைக்காதபோது, அவர்களின் தலைவன் كَعَبْ بِنْ سَعَدْ (கஅப் பின் அசது) என்பவன் அவர்களுக்கு முன்னால் மூன்று ஆலோசனைகளை எடுத்து வைத்தான். ஒன்று, நாம் முஹம்மது (ஸல்) மீது ஈமான் கொண்டு முஸ்லிம்கள் ஆகி விடுவோம். ஏனெனில் நபி {ஸல்} அவர்களின் உண்மை பகிரங்கமாகி விட்டது. இவ்வாறு போர் கண்டிப்பாக நின்று விடும். இரண்டாவது, நாம் நம் குழந்தைகளையும், பெண்களையும் கொலை செய்து விடுவோம். மேலும் விளைவு பற்றி கவலையில்லாமல் வாள்களை ஏந்தியவாறு போர்க் களத்தில் இறங்குவோம். பிறகு நடப்பது நடக்கட்டும். மூன்றாவது, இன்று (சனிக்கிழமை ஆகிய) சபத் நாளின் இரவு ஆகும். இன்று முஹம்மது (ஸல்) மற்றும் அவருடைய தோழர்கள் நம்மிடமிருந்து தம்மைத் தாமே பாதுகாப்பில் இருப்பதாகக் கருதி இருப்பார்கள். எனவே இன்று இரவு நாம் கோட்டையிலிருந்து வெளியேறி நபி {ஸல்} அவர்களின் மீதும், அவர்களின் தோழர்களின் மீதும் தாக்குதல் நடத்தி விடுவோம். நாம் வெற்றி கொள்வது வெகு தொலைவில் இல்லை. (அதாவது அதிக சாத்தியம் இருக்கிறது).

ஆனால் بَنُوْ قُرَيْظَةُ (பனூ குரைஸா எனும் யூதர்களின்) கோத்திரத்தினர் இந்த மூன்று ஆலோசனைகளையும் ஏற்பதை மறுத்து விட்டனர். மேலும் விவகாரம் அப்படியே (ஸ்தம்பித்து) நின்றது. கஅப் என்பவனுக்குப் பிறகு عَمْرُو بِنْ سَعْدىٰ (அம்ர் பின் சஃதா) என்ற இன்னொரு யூதர், நீங்கள் முஹம்மது {ஸல்} அவர்களுடன் உடன்படிக்கை செய்தீர்கள். மேலும் அதை முறித்து விட்டீர்கள். இப்போது யூதத்துவத்தின் மீதாவது உறுதியாக இருங்களேன்! மேலும் (முஸ்லிம்களாகிய) அவர்களுக்கு ஜிஸ்யா வரியைக் கொடுத்து விடுங்கள் என்று கூறினார். ஆயினும் அந்த யூதரின் ஆலோசனையும் மறுக்கப்பட்டு விட்டது. அதனால் அவர் அந்த இரவிலேயே கோட்டையிலிருந்து வெளியேறி விட்டார். மேலும் நபி (ஸல்) அவர்களின் அனுமதியுடன் அவர் செல்ல அனுமதிக்கப்பட்டார். நபி (ஸல்) அவர்கள் அவரிடம், நீர் அல்லாஹ்வுடன் நன்றியுணர்வோடு நடந்து கொண்ட காரணத்தால், அவன் உமக்கு விடுதலை வழங்கிய மனிதர் ஆவீர் என்று கூறினார்கள். நபி (ஸல்) அவர்களின் இந்த விஷயங்களைக் கேட்டு இன்னும் மூன்று பேர் அந்த இரவிலேயே கோட்டையிலிருந்து வெளியே வந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். மேலும் தமது உயிரையும், தமது குடும்பத்தையும், தமது செயல்களையும் காப்பற்றிக் கொண்டனர்.

ஹஸ்ரத் اَبُوْ لُبَابَه (அபூ லுபாபா) ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் சம்பவமும் கூறப்படுகிறது. இது தொடர்பாக எழுதப்பட்டிருப்பது என்னவெனில், بَنُوْ قُرَيْظَةُ (பனூ குரைஸா எனும் யூதர்களின்) கோத்திரத்தினரின் விருப்பத்தின்படி, பேச்சு வார்த்தை நடத்துவதற்காக நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் اَبُوْ لُبَابَه بِنْ مُنْذِرْ اَنْصَارِیْ (அபூ லுபாபா பின் முன்ஸிர் அன்சாரீ) ரலியல்லாஹு அன்ஹு அவர்களை بَنُوْ قُرَيْظَةُ (பனூ குரைஸா எனும் யூதர்களின்) கோத்திரத்தினரின் கோட்டைக்கு உள்ளே அனுப்பினார்கள். بَنُوْ قُرَيْظَةُ (பனூ குரைஸா எனும் யூதர்களின்) கோத்திரத்தினர் ஒரு சாதுரியமான வேலையைக் காட்டினர். ஹஸ்ரத் اَبُوْ لُبَابَه (அபூ லுபாபா) ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கோட்டைக்குள் நுழைந்ததுமே பெண்களும், குழந்தைகளும் அவர்களுக்கு முன்னால் அழத் தொடங்கினர். ஹஸ்ரத் اَبُوْ لُبَابَه (அபூ லுபாபா) ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் (அம்மக்களாகிய) அவர்களுக்காக மென்மையாகி விட்டார்கள். (மக்களாகிய) அவர்கள், முஹம்மது (ஸல்) அவர்கள் தமது தீர்ப்பை ஒப்புக் கொள்ள வைப்பதைத் தவிர வேறு எதற்கும் ஆயத்தமாக இல்லையே! உங்களின் கருத்து என்ன? நாங்கள் அவர்களின் தீர்ப்பை ஏற்றுக் கொள்ள வேண்டுமா என்று اَبُوْ لُبَابَه (அபூ லுபாபா) ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் கூறினர். அப்போது ஹஸ்ரத் اَبُوْ لُبَابَه (அபூ லுபாபா) ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், ஆம் என்று கூறி, அவர்கள் தமது கையால் கழுத்தை நோக்கி அறுத்து விடுவதாக சைகை காட்டியவாறு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உங்களைக் கொலை செய்வதற்கு கட்டளையிடுவார்கள் என்று கூறினார்கள். ஆனால் இது முற்றிலும் தவறு ஆகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருபோதும் அவ்வாறு எந்த எண்ணத்தையும் வெளிப்படுத்தி இருக்கவில்லை.

ஹஸ்ரத் اَبُوْ لُبَابَه (அபூ லுபாபா) ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் நம்பிக்கை துரோகம் செய்து விட்டேன் என்பதை நான் உணர்ந்தேன்.

நான் என்ன சைகை காட்டி விட்டேன் என்று நினைத்து நான் மிகவும் வெட்கமடைந்தேன். நான் இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன் என்று கூறினேன். மேலும் திரும்பி வந்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் செல்லவில்லை. பள்ளிவாயிலுக்குச் சென்று என்னை நானே தண்டனையாக தூணில் கட்டி விட்டேன். நான் மரணிக்காத வரை அல்லது அல்லாஹ் எனது இந்த செயலுக்காக எனது பாவமன்னிப்பை ஒப்புக் கொள்ளாத வரை இங்கிருந்து நகர மாட்டேன் என்று கூறினேன். இப்னு ஹிஷாம் இவ்வாறு கூறுகிறார்கள்: அவர் ஆறு இரவுகள் வரை (தூணில் தன்னைக்) கட்டியவாறு இருந்தார்கள். இறுதியில் அல்லாஹ் ஹஸ்ரத் اَبُوْ لُبَابَه (அபூ லுபாபா) ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் பாவமன்னிப்பை ஏற்றுக் கொண்டான். இது தொடர்பாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு இறைவசனம் இறங்கியது.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* எந்நிலையிலும், ஹஸ்ரத் اَبُوْ لُبَابَه (அபூ லுபாபா) ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் இந்த நிகழ்வு பற்றி சிஹாஹ் சித்தா (எனும் ஆறு ஹதீஸ் தொகுப்பு) நூல்களில் எந்தக் குறிப்பும் கிடைக்கவில்லை என்பது தெளிவாகட்டும். ஆயினும் வரலாற்று நூல்களில் இந்தக் குறிப்பு காணப்படுகிறது.

*ஹுஸூர் அவர்கள் இனிமேல் இதன் விளக்கம் தொடரும் எனக் குறிப்பிட்ட பின், துஆக்கள் செய்வது பற்றி எடுத்துக் கூறியவாறு இவ்வாறு கூறினார்கள்:* பாகிஸ்தான் அஹ்மதிகள் தாமும் தமக்காக துஆ செய்ய வேண்டும். இன்றைய நாள்களில் அவர்களுக்கு நாட்டை தொல்லைகளிலும் மிக அதிக தொல்லைகளுக்குள்ளாக்குவதற்கு முயற்சி தொடர்கின்றது. (பாகிஸ்தான் அஹ்மதிகள் ஆகிய) அவர்கள் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்கு முன்னரே விட அதிகமாக முயற்சி செய்ய வேண்டும். ஏனெனில் நான் பார்த்தது வரை, நிலைமைகள் மிகவும் மோசமானதாக ஆகிக் கொண்டே செல்கின்றன. அல்லாஹ் அருளும், கருணையும் புரிவானாக. அவ்வாறே உலகில் வாழும் அஹ்மதிகள் இருக்கின்றனர். அல்லது குறிப்பாக பாகிஸ்தானிய அஹ்மதிகளும் தமது பாகிஸ்தானிய அஹ்மதிகளுக்காக துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களின் கஷ்டங்களிலிருந்து விடுதலையை வழங்குவானாக. ஆமீன்.

அவ்வாறே வங்கத்தின் அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். (வங்கத்தினர்களாகிய) அவர்களும் தமக்காக துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களையும் எல்லாத் தீங்கிலிருந்தும் காப்பாற்றுவானாக. அங்கும் அஹ்மதிகள் மிகவும் கஷ்டங்களில் பிடிபட்டிருக்கின்றனர். அல்ஜீரியாவிலுள்ள அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களையும் எல்லாத் தீங்களிலிருந்தும் காப்பாற்றுவானாக. அவர்களும் பிடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அல்லாஹ் அவர்களின் ஈமானை உறுதியாக்குவானாக. சூடானிலுள்ள அஹ்மதிகளும் அங்குள்ள போர் நிலைமைகளின் காரணமாக மோசமான நிலைமைகளில் இருக்கின்றனர். அவர்களுக்காகவும் துஆ செய்யுங்கள்.

எல்லா இடங்களிலும் கலிமா கூறுபவர்கள் கலிமா கூறுபவர்களின் கைகளால் கஷ்டங்களில் பிடிபட்டிருக்கின்றனர். மேலும் இதன் காரணமாகத்தான் இஸ்லாத்திற்கு எதிரியான மற்றவர்கள் அச்சமின்றி, முஸ்லிம்களுக்கு நஷ்டமிழைக்க முயற்சி செய்து கொண்டிருக்கின்றனர். அதிகமாக துஆ செய்யுங்கள். அல்லாஹ் இஸ்ரேல் அரசாங்கத்தையும், அமெரிக்க அரசாங்கத்தையும் மற்றும் மிகப் பெரிய வல்லரசுகளின் கைகளைத் தடுத்து விட முடியும். அவனுடைய கையில் எல்லா

ஆற்றல்களும் இருக்கின்றன. ஆனால் அதற்காக முஸ்லிம்களும் தமது செயல்களை அல்லாஹ்வின் திருப்திற்கு ஏற்ப அமைக்க வேண்டும். மேலும் ஒருவருக்கொருவர் சகோதரர் ஆவதற்கான முன்மாதிரியாக ஆக வேண்டும். ஒருவர் மற்றவருடன் இருக்கும் கருத்து வேறுபாடுகளை முடிவுக்குக் கொண்டு வர வேண்டியது வரும். இது நமக்கு எங்கும் தென்படவில்லை. அல்லாஹ் நமக்கு உதவி செய்வான் என்ற வாக்குறுதியும் அப்போதுதான் நிறைவேறும். அது இல்லாமல் நிறைவேற முடியாதுதானே! முஸ்லிம்கள் (உண்மையான முறையில்) நம்பிக்கையாளர்களாக மாறி இருக்க வேண்டும். அல்லாஹ் நமக்கும் எல்லா முஸ்லிம்களுக்கும் அதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ
اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ
يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ
يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி O.M. Muzzammil Ahmad H.A.)